மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி,
**முன்னிலை : திரு.க.யோகேஷ்வரன், B.A., L.L.B,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
காரியாபட்டி.
2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இடைநிலை மனு எண்.4/2026**
IN
**அசல் வழக்கு எண். 170/2024**

கருப்பணன் ...... **மனுதாரர்/ 4 ம் பிரதிவாதி**

**/எதிர்/**

1. பாப்பாத்தி அம்மாள் (**இறப்பு**)
2. கணேசன் ......1,2 **எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்**

3. கருப்பத்தேவர் (**இறப்பு**)
4. மாரிமுத்து
5. பெரியசாமி
6. பேச்சி
7. கருப்பாயி
8. சதுரகிரி
9. மகாலட்சுமி. ...... **3 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3, 5 முதல் 8 பிரதிவாதிகள்**

இம்மனுவானது 29.06.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் 10.07.2026 வந்தபோது, மனுதாரர் / 4 ம் பிரதிவாதி தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு. J.மாரிக்குமார் அவர்களும், 2, 6 முதல் 9 வரையுள்ள எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.பார்த்தசாரதி அவர்கள் முன்னிலையாகியும், 1,3 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையிலும், 4,5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜர் இல்லாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், இருதரப்பினரும் செய்து கொண்ட இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு மற்றும் அசல்

வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் 76 (2) ன் கீழ் 4ம் பிரதிவாதி தரப்பு 2ம்சாட்சியாக காரியாபட்டி சார்பதிவாளரை விசாரித்து அவர் மூலம் தாவாச் சொத்துக்குரிய மனுவில் கண்டுள்ள ஆவணங்களை வரவழைத்தும், ஆவணங்களை குறியீடும் செய்ய மேற்படியாரை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க உத்தரவிட வேண்டி மனு தாக்கல்.

**2.மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர் தரப்பில், அசல் வழக்கை வாதிகள் தாவா சொத்துக்களை பாகம் செய்ய கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி மூலம் தாவா சொத்துக்களை கடந்த 16.4.2007ம் தேதியன்று 1422/2007 என்ற பதிவெண் கொண்ட கிரைய ஆவணத்தின் மூலம் 3ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார். மேற்படி 3ம் பிரதிவாதி மேற்படி சொத்துக்களை பல்வேறு பிளாட்டுகளாக பிரித்து அதனை பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார். ஆனால், வாதிகள் மேற்படி தாவா சொத்துக்களை வாங்கிய நபர்களுக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லாது போன்று வழக்கை நடத்தி வருகின்றார்கள். எனவே, மேற்படி பிராது சொத்துக்களை பிளாட்டுகளாக பிரித்து அதனை வாங்கிய நபர்களுக்கு உள்ள தொடர்பை அவர்களுக்கு மேற்படி பிளாட்டுகளை பதிவு செய்து கொடுத்த காரியாபட்டி சார்பதிவாளர் அவர்களை ஆவணங்களுடன் வரவழைத்து விசாரணை செய்தால் தான் உண்மை தன்மை நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்பதால் அசல் வழக்கில் 4ம் பிரதிவாதி தரப்பு 2 வது சாட்சியாக காரியாபட்டி சார்பதிவாளரை விசாரித்து அவர் மூலம் தாவா சொத்துக்குரிய மேற்படி பிளாட்டுகளை விற்பனை செய்த ஆவணங்களை வரவழைத்து அதனை குறியீடு செய்ய வேண்டியுள்ளது. அவ்வாறு செய்யாவிடில் அது மனுதாரர்/4ம் பிரதிவாதி

தரப்பினருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே, 4 ம் பிரதிவாதி தரப்பு 2 ம்சாட்சியாக காரியாபட்டி சார்பதிவாளரை விசாரித்து அவர் மூலம் தாவாச் சொத்துக்குரிய மனுவில் கண்டுள்ள ஆவணங்களை வரவழைத்தும், ஆவணங்களை குறியீடும் செய்ய மேற்படியாரை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:–</u>

எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் தாவா வழக்கு தாக்கல் காலத்திற்கு பின்னர் தன் தகப்பனாருக்கு பாத்தியமான மேற்கு பாதி சொத்து பொறுத்து ஏற்பட்ட ஆவணங்கள் என்றும், தாவா சொத்தில் தன் தாயாருக்கு பாத்தியமான கிழக்கு பாதி சொத்தினை விவசாயம் செய்து தானே அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ளார். மேலும் காரியாபட்டி சார்பதிவாளரை விசாரிக்க 1ம் பிரதிவாதி இ.ம.எண்.4/2022 என்ற மனுவை தாக்கல் செய்து அது கடந்த 12.9.2022 ம் தேதியன்று வாபஸ் பெறப்பட்டது என்றும், பின்பு 1 ம் பிரதிவாதி இ.ம.எண். 7/2022 என்ற மனுவை மாவட்ட பதிவாளரை விசாரிக்க அனுமதி கோரி அது கடந்த 2.12.2022 ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், அதன்பின்பு 1 ம் பிரதிவாதி சார்பதிவாளரை விசாரிக்ககோரி இ.ம.எண். 11/2023 என்ற மனுவை தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டு காரியாபட்டி சார்பதிவாளர் பி.வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு 1 ம் பிரதிவாதி வாழும் காலம்வரை பல்வேறு மனுக்களை தாக்கல் செய்து வழக்கின் விசாரணையை இழுதடிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் செயல்பட்டு வந்துள்ளார். இந்த நிலையில் இந்த மனுதாரரும், 2,3 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பேரில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

**4. <u>தீர்வு காணவேண்டிய பிரச்சனை:–</u>**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**<u>5. தீர்வு முடிவு:–</u>**

5(1).இம்மனு, எதிருரை, வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

5(2). மனுதாரர் தரப்பில், 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி மூலம் தாவா சொத்துக்களை கடந்த 16.4.2007ம் தேதியன்று 1422/2007 என்ற பதிவெண் கொண்ட கிரைய ஆவணத்தின் மூலம் 3ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார். மேற்படி 3ம் பிரதிவாதி மேற்படி சொத்துக்களை பல்வேறு பிளாட்டுகளாக பிரித்து அதனை பல்வேறு நபர்களுக்கு விற்பனை செய்துள்ளதாகவும், ஆனால், வாதிகள் மேற்படி தாவா சொத்துக்களை வாங்கிய நபர்களுக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லாது போன்று வழக்கை நடத்தி வருவதால், மேற்படி பிராது சொத்துக்களை பிளாட்டுகளாக பிரித்து அதனை வாங்கிய நபர்களுக்கு உள்ள தொடர்பை அவர்களுக்கு மேற்படி பிளாட்டுகளை பதிவு செய்து கொடுத்த காரியாபட்டி சார்பதிவாளர் அவர்களை ஆவணங்களுடன் வரவழைத்து விசாரணை செய்தால் தான் உண்மை தன்மை நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்பதால் அசல் வழக்கில் 4ம் பிரதிவாதி தரப்பு 2 வது சாட்சியாக காரியாபட்டி சார்பதிவாளரை விசாரித்து ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

5(3). எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் தாவா வழக்கு தாக்கல் காலத்திற்கு பின்னர் தன் தகப்பனாருக்கு பாத்தியமான மேற்கு பாதி சொத்து பொறுத்து ஏற்பட்ட ஆவணங்கள் என்றும், தாவா சொத்தில் தன் தாயாருக்கு பாத்தியமான கிழக்கு பாதி சொத்தினை விவசாயம் செய்து தானே அனுபவம் செய்து வருவதாகவும், மேலும் காரியாபட்டி சார்பதிவாளரை விசாரிக்க 1ம் பிரதிவாதி இ.ம.எண்.4/2022 என்ற மனுவை தாக்கல் செய்து அது கடந்த 12.9.2022ம் தேதியன்று வாபஸ் பெறப்பட்டது

என்றும், பின்பு 1ம் பிரதிவாதி இ.ம.எண்.7/2022 என்ற மனுவை மாவட்ட பதிவாளரை விசாரிக்க அனுமதி கோரி அது கடந்த 2.12.2022ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், அதன்பின்பு 1ம்பிரதிவாதி சார்பதிவாளரை விசாரிக்ககோரி இ.ம.எண். 11/2023 என்ற மனுவை தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டு காரியாபட்டி சார்பதிவாளர் பி.வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது வழக்கை இழுதடிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது எதிர்மனுதாரர்களின் வாதமாகும்.

5(4). உரிமையியல் நடைமுறை விதி 75–ஐ பார்வையிடுகையில்,

CRP 75(3) – " No Court shall issue such a summons unless it considers the production of the original necessary or is satisfied that the application for a certified copy has been duly made and has not been granted" என கண்டுள்ளது. மனுதாரர் தரப்பில் மனுதாரர் கோரும் ஆவணங்களை மனுவில் குறிப்பிட்டுள்ள அலுவலகத்திலிருந்து பெறுவதற்கு மனுதாரர் மனுதாக்கல் செய்தாரா? அந்த மனுவின் நிலை என்ன? மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டதா? மனுதாரர் ஆவணங்களை பெற என்ன முயற்சி செய்தார் என்பன போன்ற விவரங்கள் இம்மனுவில் குறிப்பிடவில்லை. மேலும் மனுதாக்கல் செய்தும் ஆவணங்கள் கிடைக்கபெறவில்லை என்றும் தெரிவிக்கப்படவில்லை. வெறுமனே காரியாபட்டி சார்பதிவாளரை விசாரிக்க வேண்டும் என்று மட்டுமே கோரியுள்ளார். மனுதாரர் தனது தரப்பை நிரூபிக்க மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்தாலே போதுமானதாகும். மனுதாரர் தரப்பில் மனுவில் குறிப்பிட்டுள்ள அலுவலகத்தில் முறையாக மனுதாக்கல் செய்து சான்றிட்ட நகல்கள் பெற்றுக்கொள்ள வழிவகை உள்ளபோது மனுதாரர் கூறியுள்ள வாதம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை. எனவே, மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

**6. இறுதிமுடிவு:–**

**இறுதியாக, இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை குறித்து உத்தரவு இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜுலை மாதம் 14 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**
இல்லை.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G
மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

| |
|---|
| மா.உ.ம.நீ.ந.நீ. காரியாபட்டி,<br>IA.No. 04/2026<br>in<br>O.S.No. 170/2024<br>உத்தரவு<br>நாள். 14.07.2026 |